# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு
# 2020
# தமிழ்மொழி
## வளர் தமிழ் 7

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **1** | **30** | | | |
| **2** | **10** | | | |
| **3** | **10** | | | |
| **4** | **10** | | | |
| **5** | **15** | | | |
| **6** | **05** | | | |
| **7** | **20** | | | |
| மொத்தப் புள்ளிகள் | **100** | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

TEDC

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. மெய் எழுத்துகளின் வகைகள்

அ ) 7 ☐ ஆ ) 3 ☐
இ ) 5 ☐ ஈ ) 18 ☐

2. கயிலைவன்னியன் ஆண்ட வன்னிப்பகுதி

அ ) பனங்காமம் ☐ ஆ ) பூநகரி ☐
இ ) கந்தரோடை ☐ ஈ ) மன்னார் ☐

3. பங்கம் என்பது

அ ) கோவில் ☐ ஆ ) தங்கம் ☐
இ ) சேறு ☐ ஈ ) வயல் ☐

4. பாடி என்பது

அ ) பெயரெச்சம் ☐ ஆ ) வினைமுற்று ☐
இ ) வினையடி ☐ ஈ ) வினையெச்சம் ☐

5. வன்னி நிலப்பரப்பின் தெற்கு எல்லையாக அமைந்த இடம்

அ ) திருகோணமலை ☐ ஆ ) அநுராதபுரம் ☐
இ ) யாழ்ப்பாண நீரேரி ☐ ஈ ) மன்னார் ☐

6. துளைக்கருவிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ ) ஏழில் ☐ ஆ ) வீணை ☐
இ ) மேளம் ☐ ஈ ) தாளம் ☐

7. பின்வருவனவற்றுள் அடுக்குத்தொடர்

அ ) படபட ☐ ஆ ) ஏறிஏறி ☐

இ ) திருதிரு ☐ ஈ ) புறுபுறு ☐

8. ______________ நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாண அரசு வலிமை பெற்றிருந்தது.

அ ) 13 ஆம் ☐ ஆ ) 20 ஆம் ☐

இ ) 9 ஆம் ☐ ஈ ) 6 ஆம் ☐

9. இரக்கப்போனாலும் சிறக்கப்போ என்ற கருத்தை விளக்கும் பழமொழி

அ ) ஒற்றுமை நலன் விளைவிக்கும். ☐

ஆ ) வறுமையிலும் செம்மையாய் இரு. ☐

இ ) குறைந்த பலன் கூடிய செலவு. ☐

ஈ ) விரும்பினால் இல்லாதவனும் ஈயலாம். ☐

10. ஆல் என்ற உருபு

அ ) 1 ஆம் வேற்றுமை ☐ ஆ ) 4 ஆம் வேற்றுமை ☐

இ ) 2 ஆம் வேற்றுமை ☐ ஈ ) 3 ஆம் வேற்றுமை ☐

11. உலகம் போற்றும் முத்தமிழ் வித்தகர்

அ ) தனிநாயகம் அடிகள் ☐ ஆ ) விபுலாநந்த அடிகள் ☐

இ ) தாவீது அடிகள் ☐ ஈ ) இளங்கோ அடிகள் ☐

12. மீன்பாடும் தேன் நாடு எனக் கூறப்படும் இடம்

அ ) மட்டுநகர் ☐ ஆ ) திருகோணமலை ☐

இ ) யாழ்ப்பாணம் ☐ ஈ ) மன்னார் ☐

13. வாழை + பழம் என்பதைச் சேர்த்து எழுதினால்

அ ) வாழைபழம் ☐ ஆ ) வாழைப்பழம் ☐

இ ) வாழைய்பழம் ☐ ஈ ) வாழைய்ப்பழம் ☐

14. அசேலனை வென்ற தமிழ் மன்னன்

அ ) எல்லாளன் ☐ ஆ ) சூரத்தீசன் ☐

இ ) துட்டகெமுனு ☐ ஈ ) குத்திகன் ☐

15. இருநீர் என்பது

அ ) சிற்றாறு ☐ ஆ ) நீரோடை ☐

இ ) பெருங்கடல் ☐ ஈ ) சிறுகுளம் ☐

16. பெரியபுளியங்குளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமியக் கல்வெட்டுகள்

அ ) 35 ☐ ஆ ) 24 ☐

இ ) 30 ☐ ஈ ) 32 ☐

17. மேடு என்பதன் எதிர்ச்சொல்

அ ) முடிவு ☐ ஆ ) பள்ளம் ☐

இ ) வெப்பம் ☐ ஈ ) வன்மை ☐

18. இறந்தகாலத்தைக் குறிக்கும் சொல்

அ ) சென்றனர் ☐ ஆ ) செல்கின்றனர் ☐

இ ) செல்வர் ☐ ஈ ) செல்கின்றது ☐

19. ஆத்திசூடி, சினங்காத்தலை ______________ என்று கூறுகிறது.

அ ) ஆறுவது சினம் ☐ ஆ ) அடங்காச் சினம் ☐

இ ) அறிவுக்குப்பகை சினம் ☐ ஈ ) வெகுளாமை ☐

20. கோதை தாயகப் பாடலை இனிமையாகப் பாடினாள். இதில் வந்துள்ள பயனிலை அடைமொழி

அ ) பாடலை ☐ ஆ ) இனிமையாக ☐

இ ) தாயக ☐ ஈ ) பாடினாள் ☐

21. நீர் நிலையைக் குறிக்கும் சொல்

அ ) வானம் ☐ ஆ ) நிலம் ☐

இ ) ஆறு ☐ ஈ ) காற்று ☐

22. உழவர் வயலை உழும் போது மேலே மிதந்தவை

அ ) இளநீர்கள் ☐ ஆ ) பலாக்கனிகள் ☐

இ ) மீன்கள் ☐ ஈ ) சங்குகள் ☐

23. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல்

அ ) இடர் ☐ ஆ ) மகிழ்ச்சி ☐

இ ) உவகை ☐ ஈ ) களிப்பு ☐

24. யாகாவா ராயினும் ________ காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

அ ) சோகாக்க ☐ ஆ ) நாகாக்க ☐

இ ) கைகாக்க ☐ ஈ ) யாகாக்க ☐

25. தந்தைக்கு தாய்போல அரசனுக்கு ______________ .

அ ) செல்வி ☐ ஆ ) இறைவி ☐

இ ) அரசி ☐ ஈ ) அழகி ☐

26. வீரமாமுனிவரின் இயற்பெயர்

அ ) சேவியர் ☐ ஆ ) பெச்கி ☐

இ ) றொபேட் ☐ ஈ ) தோமசு ☐

27. கரகர என்பது

அ ) அடுக்குத்தொடர் ☐ ஆ ) இணைமொழி ☐

இ ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஈ ) இரட்டைக்கிளவி ☐

28. பல்வேறு நாடுகளில் தமிழர் வாழ்கின்றனர். ______________

அவர்களுக்கென்று ஒரு நாடு இல்லை.

அ ) எனவே ☐ ஆ ) ஆனால் ☐

இ ) ஆகையால் ☐ ஈ ) ஏனெனில் ☐

29. முத்தமிழின் உறுப்பாக அமைவது

அ ) சிற்பம் ☐ ஆ ) இசை ☐

இ ) நடனம் ☐ ஈ ) ஓவியம் ☐

30. கண்டான் என்ற சொல்லின் வினையடி

அ ) கண்ட ☐ ஆ ) கண் ☐

இ ) காண் ☐ ஈ ) கண்டு ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

திருக்குறளைத் தந்த திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். இவர் முதற்பாவலர், பொய்யில் புலவர், செந்நாப்போதார் போன்ற சிறப்புப் பெயர்களாலும் குறிப்பிடப்படுகிறார். தமிழ்நூல்களில் 'திரு' என்னும் அடைமொழியோடு வருகின்ற முதல் நூல் திருக்குறளாகும். திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்ற மூன்றுபிரிவுகளைக் கொண்டது. இதில் அறம் - 38, பொருள் - 70 இன்பம் - 25 என மொத்தம் 133 அதிகாரங்கள் உள்ளன. இதற்கு முப்பால், தெய்வநூல், பொய்யாமொழி போன்ற வேறு பெயர்களும் உள்ளன.

1. திருவள்ளுவர் எத்தனை ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்?

______________________________

______________________________

2. திருக்குறளின் பிரிவுகளைத் தருக.

______________________________

______________________________

3. திருவள்ளுவரின் சிறப்புப் பெயர்கள் இரண்டைத் தருக.

______________________________

______________________________

4. திருக்குறளில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன.

______________________________

5. திருக்குறள் என்ற சொல்லில் வரும் அடைமொழி எது?

______________________________

______________________________

புள்ளிகள் 10



TEDC

3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. சேர மன்னனைக் காணவந்த புலவர் யார்?

2. வன்னியில் நாகர்கள் வாழ்ந்தமைக்குச் சான்றாக விளங்கும் இடம் ஒன்று தருக.

3. உலகப் பொதுமறை என அழைக்கப்படும் நூல் எது?

4. கயிலை வன்னியனுக்கு அஞ்சி போர்த்துக்கேயர் கட்டிய கோட்டைகள் எவை?

5. விபுலாநந்த அடிகள் பிறந்த ஊர் எது?

6. "தமிழுக்குத் தொண்டு செய்தால் - அந்தத் தமிழ் உள்ளளவும் வாழ்வோம்" இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது.

7. தன்னைத்தான் காக்க விரும்புபவன் எதைக் காக்க வேண்டும்?

புள்ளிகள் 10



TEDC

4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.

## இன்பத்தமிழ்

| | | | | |
|---|---|---|---|---|
| மயிலே | படைத்தானே | பூங்குயிலே | என்றும் | தேனமுதே |

செல்வக் கனியமுதே - என்
செந்தமிழும் நீ தானே
இன்பத் ______________ - என்
இன்னுயிரும் நீ தானே

பாடும் ______________ - உனை
பாடிடுவேன் நான் தானே
ஆடும் ______________ உனை
தாலாட்டிடுவேன் நான் தானே

உன்னை எனைப் போல
உயர்வாய் அவன் ______________
நீடித்த ஆயுளுடன்
நம்மை ______________ காப்பானே

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. படி என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு சொல்லியங்கள் எழுதுக.

_______________________________________________

_______________________________________________

2. ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

வினாச் சொல்லியம் ______________________

ஏவல் சொல்லியம் ______________________

3. எதிர்ச்சொற்கள் தருக.

உறக்கம் ______________

அகம் ______________

கலக்கம் ______________

4. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

பலவின்பால் ______________

சினைப்பெயர் ______________

பெயரெச்சம் ______________

5. மாலதி அழகான ஓவியத்தை வரைந்தாள். இச்சொல்லியத்தின் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்பவற்றைத் தருக.

எழுவாய் ______________

செயப்படுபொருள் ______________

பயனிலை ______________

புள்ளிகள் 15



TEDC

6) மிகப் பொருத்தமான சொல்லை கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. கயிலைவன்னியன் ஆங்கிலேயருக்குத் ______________ செலுத்த மறுத்தான்.
( திறை, திரை )

2. முயற்சி உடையார் ______________ அடையார்.
( இகழ்ச்சி, இகல்ச்சி )

3. ஓட்டுநர் பெரும் அல்லற்பட்டுத் தொடருந்தை ______________ .
( நிருத்தினார், நிறுத்தினார் )

4. தமிழ்க்குத் ______________ செய்தால் அந்தத் தமிழ் உள்ள அளவும் வாழ்வோம்.
( தொண்டு, தொன்டு )

5. குழந்தை தாயின் மடியில் ______________ மூடி உறங்கியது.
( விளிகளை, விழிகளை )

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- கயிலைவன்னியன
- தலையைக் காத்த தமிழ்
- நான் கண்ட கனவு

புள்ளிகள் 20